# தமிழரின் பிரச்சனை பற்றி சிவப்புக் கட்சி என்ன கருதுகிறது?




ILLUSTRASJON: LATUFF

ROEDT.NO

# தமிழரின் பிரச்சனை பற்றி சிவப்புக்கட்சியின் கருத்து

நாங்கள் தமிழரின் பிரச்சனை தொடர்பான எமது அடிப்படை நிலைப்பாட்டையும் இனி எத்தகைய நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம் என்பது பற்றியும் கூறவிரும்புகின்றோம். சிவப்புக்கட்சி எப்பொழுதுமே தமிழர் சுயநிர்ணய உரிமையுள்ள தேசியம் என்பதை நோர்வேயும் ஏனைய உலகநாடுகளும் அங்கீகரிக்கவேண்டும் என்பதைக் கூறிவந்துள்ளது. இதுவே தமிழரின் நீண்ட முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான அடிப்படையாகும்.

தீவானது எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதைச் சிறிலங்காவின் குடிமக்களே தீர்மானிக்கவேண்டும். இனக்குழுக்களின் உரிமை நிலைப்பாடானது சமதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கூடாக ஒரே நாடா அல்லது காலணித்துவத்திற்கு முன்பிருந்தமாதிரியான இரு நாடுகளா அல்லது இரண்டுக்கும் இடைப்பட்ட தீர்வாக சமஷ்டியா அல்லது கூட்டாட்சியா என்று முடிவு செய்யப்படவேண்டும். தமிழ், சிங்கள குடிமக்கள் இருவருக்குமே சுயநிர்ணய உரிமையுண்டு. இதன் அடிப்படையில் தமிழர் தமிழீழம் என்ற தங்களின் தாய்நாட்டைப் பெறமுடியும். சுயநிர்ணய உரிமையானது எல்லோருக்கும் உரியதே. எந்த ஒரு தேசிய இனத்துக்கும் வேறு ஒரு தேசிய இனத்தை அடக்கவோ அழிக்கவோ உரிமையில்லை.

ஏற்கனவே நோர்வேயானது சமாதானப் பேச்சுக்களில் முக்கியபங்கு ஆற்றியமையினால் இன்றைய நிலைமை தொடர்பாக நோர்வேக்கு விசேட பொறுப்பு உண்டு. நோர்வேயானது ஐக்கியநாடுகள் சபையிலும் உலக சமுதாயத்தின் முன்னும் தெளிவாகக் கதைத்தால் எல்லோரும் அதை செவிமடுப்பர். நோர்வேயானது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கேள்வியைச் சர்வதேச சமுதாயத்தின் முன்னும், சிறிலங்கா அரசாங்கத்திடமும் கௌரவமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு அழுத்தம் கொடுப்பதற்குச் சிவப்புக் கட்சியானது வேலை செய்ய விரும்புகிறது.

இன்று நோர்வே அரசாங்கத்தின் மௌனம் பிரச்சனையின் ஒரு பகுதியாக உள்ளது. பேச்சுவார்த்தைகளுக்கூடாக அரசியல் தீர்வைப் பெற விரும்பாத கொழும்பு அரசாங்கத்தினாலேயே சமாதான நடவடிக்கைகள் முறிந்துபோயின. அவர்கள் போரினூடாகவும் அரசபயங்கரவாதத்திற்கூடாகவும் முடிவான தீர்வைப் பெற விரும்பினார்கள். இதனால் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் மட்டுமன்றி அப்பாவிப் பொதுமக்களும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான கொள்கைக்கூடாக அமைதியை நிலைநாட்டமுடியாது என்பதை இலங்கை அரசாங்கத்திற்கு எடுத்துரைக்கவேண்டியது கட்டாயமானதும் அவசரமானதுமாகும். நோர்வேயைத் தனது நடுநிலைக் கொள்கையைக் கைவிட்டு கொழும்பு அரசாங்கமே

தனது கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதை கூறவைப்பதற்குச் சிவப்பு கட்சியானது வேலைசெய்ய விரும்புகிறது.

மேலும் ஐ.நா அல்லது சர்வதேச தொண்டர் அமைப்புகள் உள்நாட்டு அகதிமுகாம்களைப் பொறுப்பு எடுப்பதற்கும் அங்குள்ள மக்களை அவர்கள் விரும்பும் பகுதிகளுக்குத் திருப்பி அனுப்புவதற்கும் மற்றும் ஐ.நாவின் கண்காணிப்பாளர்கள் அகதிமுகாங்களையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவதற்கும் அனுமதிக்கப்படுவதற்கு, நோர்வே அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் சிவப்புகட்சியானது கேட்டுக்கொள்கிறது. தமிழர் பிரதேசங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நோர்வேயிய களமருத்துவமனை அமைப்பதால், துநளெ ளுவழட-வநடிநசப அவர்கள் 2005 தேர்தலுக்கு முன் தமிழருக்கு வழங்கிய உறுதிமொழ-ியை மறக்கவில்லை என்று உறுதிப்படுத்த முடியும்.

அத்துடன் தமிழர் வாழும் பிரதேசங்களில் உள்ள நிலைமைகளை உலகநாடுகளுக்கு வெளிப்படுத்துவதற்கு, செய்தி ஊடகங்களை அங்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் சிவப்புக்கட்சியானது கேட்டுக்கொள்கிறது. நாங்கள் இப்பொழுது பார்த்ததுபோன்ற பயங்கரவாதத்திற்கு எதிரான போரில், நீண்டகாலமாக தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்டு வரும் வன்முறைக்காக இலங்கை அரசானது போர்ச்சட்டமீறல்களுக்காகவும், மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயல்களுக்காகவும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் சிவப்புக் கட்சியினர் கருதுகின்றனர். அத்துடன் இதை இனப்படுகொலை என்ற பதத்தின் கீழ் குற்றம் சாட்டுவதற்கும் ஆய்வுசெய்யப்படவேண்டும். ஏற்கனவே, 1983 இல் சிங்களவர்கள் தமிழர்கள் மீது மேற்கொண்ட கொலைகளையும் பயங்கரவாதத்தையும் ‘இனப்படுகொலை போன்ற செயற்பாடு’ என்று சர்வதேச சட்டவாளர்கள்குழு கூறியுள்ளது. இப்பொழுது 26 வருடங்களுக்கு பின்பாக, சிங்கள அரசால் தமிழர் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட மற்றும் நடத்திவரும் நீண்டகால இனப்படுகொலையை ஐ.நா. வுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் நோர்வே அரசாங்கம் எடுத்துரைக்கவேண்டும். இனப்படுகொலை என்று ஐ.நா வரைவிலக்கணப் படுத்தியதை சிங்கள அரசாங்கம் பலமுறை செய்துள்ளபோதும் ஐ.நாவின் யாப்பின்படி தமிழர்களுக்கு உரிமையுண்டு என்று ஒருபோதும் ஐ.நா கூறவில்லை.

நோர்வே சிறிலங்காவிற்கு உதவி வழங்கும்பட்சத்தில் தமிழர் பிரதேசங்களில் செயற்படும் அரசசார்பற்ற தொண்டுநிறுவனங்களுக்கூடாகவோ அல்லது தமிழ் அமைப்புகள் ஊடாகவோதான் செயற்படுத்தவேண்டும்.



FOTO: INGAR STEINHOLT

www.roedt.no

# Stem Rødt!

இதற்கு இலங்கை அரசு மறுப்புதெரிவிக்குமானால் உதவிவழங்குவதை இடைநிறுத்தி அந்தப்பகுதியில் செயற்படும் சர்வதேச தொண்டுநிறவனத்துக்கோ, அல்லது புலத்தில் உள்ள சுயாதீன தமிழர் அமைப்புகளுக்கோ உதவி செய்யவேண்டும் என்று சிவப்புக்கட்சியினர் கருதுகின்றனர். அத்துடன் சிறிலங்கா அரசு எதிரான போராட்டங்களில் இங்கே நாட்டில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பங்குகொள்வதற்கு சிவப்புக்கட்சி விரும்புகின்றது.

இங்கே சுட்டிக்காட்டப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நகரசபையிலும், மாவட்ட சபையிலும் வேலைசெய்வதற்காக விரும்புகின்றோம். அத்துடன் தொழிற்சங்கங்களுடனும், ஏனைய ஆர்வமுடைய நிறுவனங்களுடனும் இணைந்து வேலைசெய்து இப்பிரச்சனைக்கு ஆதரவு திரட்ட விரும்புகின்றோம்.

நாங்கள் பாராளுமன்றத்துக்கு வரும்போது இந்த அரசியலை முன்னெடுப்பதற்கான ஒரு அரங்கமாக அதைப் பயன்படுத்துவோம். ஒரு பரந்த ஒன்றிணைந்த செயற்பாட்டை உருவாக்குவதற்காக, பாராளுமன்றத் தேர்தலின் பின் முடியக்கூடியளவிற்கு எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி ‘தமிழர் குழு’ ஒன்றைப் பாராளுமன்றத்தில் உருவாக்குவதற்குப் பாடுபடுவோம்.

தமிழ்மக்களுக்கான பக்கபலமான வேலை என்று வரும்போது கொழும்பு அரசாங்கத்துடன் தொடர்பற்ற தமிழ் நிறுவனங்களுடன் இணைந்து வேலைசெய்வதற்கே முன்னுரிமை அளிக்கின்றோம். அத்துடன் தமிழ்மக்களும் நோர்வேயிய மக்களும் இணைந்து வேலைசெய்வதற்கான வேலைத்திட்டத்தை வளர்த்தெடுப்பதற்கு உதவிசெய்ய விரும்புகின்றோம்.

Oslo, 12. juni 2009
சிவப்புக்கட்சியின் செயற்பாட்டுக்குழு

